மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கால்நடை விரிவாக்க பணியாளர்களுக்கு வேண்டிய மருந்துகளுக்காக தனி யாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. எனினும் ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கால்நடைகள் நோய்வாய்ப்படும்போது அவைகளுக்கு தகுந்த சிகிச்சை செய்யவும், வேண்டிய மருந்துகளை அருகிலுள்ள கால் நடை மருந்தகங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவும் கால்நடை விரிவாக்கப் பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருச்சியிலிருந்து ஆலூர் வரை நகரப் பேருந்து விடப்பட்டு வருவதாகத் தெரிவித் தார். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஆலூரிலிருந்து . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்விக்கு வந்தாகி விட்டது.

திருப்பரங்குன்றம் சரவணப் பொய்கையை செப்பனிடல்.

*117—(*வினா எண் 9562)* **திரு. மு. மாரிமுத்து:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் சரவணப் பொய்கையை செப்ப னிட்டு கரையோரங்களிலுள்ள நீராழி மண்டபங்களைப் புதுப் பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) வேலைகள் எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, (அ) மதுரை மாவட்டம் திருப்பரங் குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான சரவணப் பொய்கையை செப்பனிட்டு கரையோரங் களிலுள்ள நீராழி மண்டபங்களை புதுப்பிக்கும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

(ஆ) மற்றும் (இ) : இக்கேள்விகளுக்கு இடமில்லை.

1987 மார்ச் 11]

திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புராண இதிகாசங்களில் சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற இந்த சரவணப் பொய்கையைச் சுற்றியுள்ள நீராழி மண்டபங்களும், நீராடுகின்ற துறைகளும், சுற்றுச் சுவர்களும் இடிந்து காணப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், அந்தத் திருக்குளத்திற்கு தண்ணீர் வருவதற்கு வழியும் இல்லை. அதைப்போல் தண்ணீர் வெளியே செல்வதற்கு வழியும் இல்லை. அங்கு தண்ணீர் நிரப்புவதற்கு ஒரு ஆழ்குழாய் துளைக் கிணறு போட்டுக் கொடுத்தால் நன்றாக இருக்கும். மேலும், ஆயிரத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் நீராடுகின்ற அந்தத் திருக்குளத்தில் நீண்டகாலமாக சேறும், சகதியும் அதிகமாகிவிட்ட காரணத்தால் அதைத் தூர் வாருகின்ற பணியை அரசு மேற்கொள்ளுமா அல்லது அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலினுடைய நிர்வாகத்தை அதற்காக அரசு கேட்டுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான சரவணப் பொய்கையின் நடுவில் உள்ள நீராழி மண்டபம் மட்டும்தான் அத்திருக்கோயிலுக்குச் சொந்தமானது. அது நல்ல நிலையில் உள்ளது. சரவணப் பொய்கையின் கரையிலுள்ள நீராழி மண்டபங்கள் அத்திருக்கோயிலுக்குச் சொந்தமானவை அல்ல. அந்த மூன்று நீராழி மண்டபங்களும், முறையே தருமபுரம் ஆதீனம், ரெட்டியார் மண்டபம், சுத்த சன்மார்க்க தர்ம மடம் ஆகியோர்களுக்குச் சொந்தமானதாகும். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல், அந்தத் திருக்குளத்தைப் பழுது பார்க்கவேண்டும் என்று சொன்னால், அதற்காக அந்த நிர்வாக அதிகாரியை, அதற்கு தண்ணீர் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி சொல்லலாம்.

திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகின்ற, கூடுகின்ற இடம். அந்த இடத்தில், அது சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமா அல்லது பேரூராட்சிக்குச் சொந்தமா என்ற பிரச்சினையை ஓரளவு தள்ளி வைத்துவிட்டு, அதை நேரடியாக பக்தர்களுக்குச் செய்கின்ற வசதி என்ற அளவில் அந்தக் குளத்தை சீர்படுத்துவதற்கும், அந்தக் குளத்திற்கு தண்ணீர் நிரப்புவதற்கு ஆழ்குழாய் கிணறு போடுவதற்கும், சுற்றியுள்ள பகுதிகளிலே பூங்காக்களை அமைப்பதற்கும், மின்சார விளக்குகளை ஏற்படுத்தித் தருவதற்கும் அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் புகழ்பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோயிலிலுள்ள திருக்குளத்திற்குக் கூட தண்ணீர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இல்லை. அதைச் சுற்றியுள்ள ஓட்டல் உரிமையாளர்கள் ஆழ் குழாய்க் கிணறு போட்டு தண்ணீரை எடுத்து விடுவதால், குளத்தில் தண்ணீர் வற்றிப் போய்விட்டது. ஆகவே, அந்தக் குளத்திற்கும், ஆழ்குழாய்க் கிணறு போட்டு தண்ணீர் நிரப்ப ஏற்பாடு செய்திருக்கிறோம். அதைப்போல, இந்தத் திருக்குளத்திலும் தண்ணீர் நிறைய இருக்கும்படி ஆழ்குழாய்க்கிணறு போட அரசு ஆணையிடும்.

சேலம் மாவட்டம், ஓமலூர், காடையாம்பட்டி ஒன்றியங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.

118—(*வினா எண் 9992) **திரு. கே. அன்பழகன் :** மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓமலூர், காடையாம்பட்டி ஒன்றியங்களில் 1986–87 ஆம் ஆண்டில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். இந்த இரு ஒன்றியங்களிலும் 7 புதிய சங்கங்கள் ஆரம்பிக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இந்த நிதியாண்டு முடிவுக்குள் துவக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[முற்பகல் 11–00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 118 முடியும் வரை அவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே. அன்பழகன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். காடையாம்பட்டி, ஓமலூர் ஒன்றியங்களிலுள்ள கிராமங்களில் பெரும்பாலானவை மலைப் பாங்கான பகுதிகளாகும். அந்தப் பகுதி மக்கள் பெரும்பாலும் கால்நடை வளர்ப்பதை முக்கியத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மேலும் பல கிராமங்களுக்கு இந்தச் சங்கங்களை அமைத்துத் தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.